# அவசரக்கூட்டம்

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் அவசரக்கூட்டம் **2019** ம் ஆண்டு செப்டம்பர் மாதம் **05** ஆம் நாள் வியாழன் கிழமை மாலை **4.30** மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

## பொருள் : 1

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்: 17349/2019/இ3 நாள்:03.09.2019 ஆம் தேதியிட்ட கடிதத்தில், பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2019-2020 ஆம் ஆண்டின் கீழ் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் தார் சாலைகள் அமைக்கும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கடிதத்தில், தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம் 2019-2020 ன் கீழ் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி ரூ.0.40 கோடியும், மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு மானிய நிதி / நில அபிவிருத்திக் கட்டணம் 1.20 கோடியும் மற்றும் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.0.40 கோடி என நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | நீளம் (கி.மீ.) | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | பல்லடம் நகராட்சி வார்டு எண்: 01,03,07,08,11,15 மேற்கு கல்லம்பாளையம், ஜெமினி கார்டன், செல்வபுரம், வள்ளலார் நகர், தெற்குபாளையம் சண்முகா நகர், செந்தோட்டம், மகாலட்சுமிபுரம், கிருஷ்ணா நகர் விரிவு, மீனாட்சி அவென்யூ, பனப்பாளையம் விரிவு, இட்டேரி வீதி, காளிப்பா நகர் மற்றும் வளர்மதி சர்வீஸ் ஸ்டேசன் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்த தார்சாலைகள் மற்றும் மண் சாலைகளை பேவர் மிசின் கொண்டு தார்சாலை அமைத்தல். | 4.275 | 200.00 |

(ந.க.எண்: 751/2019/இ1)

**அலுவலகக்குறிப்பு** :
மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 2**

நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தி வரும் நகலெடுக்கும் இயந்திரத்திற்கு டோனர் இரண்டு எண்ணிக்கை வாங்கும் பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.25,000க்கும், மேற்படி பணியை ஒப்படைப்பு பணியாக பணியை மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் 684/2019/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் 3**

பல்லடம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் கழிவுகளானது உரமாக மாற்றும் பொருட்டு நுண் உர மையத்திற்கு கொண்டு சென்று இயந்திரத்தின் முலம் சிறு துண்டுகளாக அரைக்கப்பட்டு அதற்குரிய தொட்டிகளில் போடப்படுகிறது. மேற்படி தொட்டிகளில் இடப்பட்ட மக்கும் கழிவானது விரைவாக உரமாகும் பொருட்டு அதன் மீது தெளிப்பதற்கு தேவையான இ.எம்.கரைசல் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ. 9.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 4

நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களில், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.4.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண் 684/2019/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 5

வார்டு எண்:16 ஜே.கே.ஜே. காலனி பகுதியில் மழைநீர் வடிகால் பராமரிப்பு செய்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.0.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 684/2019/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 6

நகராட்சி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மழைநீரின் கட்டமைப்பின் அவசியம் கருதி 7000 எண்ணிக்கையில் துண்டு பிரசுரம் அறிவிப்பு நோட்டீஸ் விநியோகம் செய்தல், கட்டிடங்களுக்கு அடையாளக் குறியீடு ஏற்படுத்தும் வகையில் 7000 எண்ணிக்கையில் ஸ்டிக்கர் தயார் செய்தல் மற்றும் UIDSSMT திட்டத்தின் கீழ் தவணை முறையில் குடிநீர் இணைப்பு இல்லாத வீடுகளுக்கு இணைப்பு வழங்குவது குறித்து பொதுமக்களுக்கு அறிவிப்பு நோட்டீஸ் அச்சடிக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.28,000 க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 684/2019/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 7

வார்டு எண் 01 முதல் 18 வரை உள்ள பகுதிகளுக்கு குடிநீர் தவிர இதர பிற தேவைகளுக்க பயன்படுத்தப்பட்டு வரும் ஆழ்துளைக் கிணறு மின்மோட்டார் மற்றும் பாதுகாக்கப்பட்ட திறந்தவெளி கிணறு மின்மோட்டார் மூலம் தண்ணீர் வினியோகம் செய்ய இந்நகராட்சியில் நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தால் இவ்வதியாவசிய பணியினை நடப்பாண்டு 2019-2020 பொதுப்பணித்துறை தர விகிதப்படி ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர்களை நியமித்து பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 684/2019/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 8

வார்டு எண் 01 முதல் 18 வரை உள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய பயன்படுத்தப்பட்டு வரும் 9 மேல்நிலைத் தொட்டிகளை பராமக்கவுங்ம, அம்மேல்நிலைத் தொட்டி வாயிலாக விநியோகம் செய்ய பயன்படுத்தப்பட்டு வரும் செலீஸ் வால்வுகளை இயக்கி குடிநீரினை சீராக விநியோகம் செய்யவும் நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தால் இவ்வத்தியாவசிய பணியினை நடப்பாண்டு பொதுப்பணித்துறை தர விகிதப்படி, பராமரிப்பு பணியாளர்கள் 15 நபர்கள்(அலுவலகப்பணி உட்பட), குடிநீர் கசிவுகளை சரிசெய்ய பிட்டர் ஒருவரையும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர்களை நியமித்து பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 684/2019/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 9

நகராட்சி வார்டு எண்:14 சிடிசி காலனி பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் போது கடைநிலை பகுதி (Dead End) வரை குடிநீர் போதிய அழுத்தத்துடன் செல்லவில்லை. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களுடன் நேரில் ஆய்வு செய்த போது, மேற்கண்ட குடிநீர் மேல்நிலைத் தொட்டி உட்புறம் தரைமட்ட நீர்த் தேக்க தொட்டி அமைத்து, நீரேற்றம் செய்தால் கடைநிலை பகுதி வரை குடிநீர் போதிய அழுத்தத்துடன் செல்லும் என தெரிவித்தனர். எனவே அதன் அடிப்படையில் சிடிசி காலனியில் உள்ள மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் 75,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி(Ground level sump) மற்றும் மின் மோட்டார், பைப் லைன் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.9.60 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வேண்டப்படுகிறது. (ந.க.எண் 684/2019/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 10

நகராட்சி வார்டு எண்:13 மேற்கு பல்லடம் பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் போது கடைநிலை பகுதி (Dead End) வரை குடிநீர் போதிய அழுத்தத்துடன் செல்லவில்லை. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களுடன் நேரில் ஆய்வு செய்த போது, மேற்கண்ட குடிநீர் மேல்நிலைத் தொட்டி உட்புறம் தரைமட்ட நீர்த் தேக்க தொட்டி அமைத்து, நீரேற்றம் செய்தால் கடைநிலை பகுதி வரை குடிநீர் போதிய அழுத்தத்துடன் செல்லும் என தெரிவித்தனர். எனவே அதன் அடிப்படையில் மேற்கு பல்லடத்தில் உள்ள மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் 75,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி(Ground level sump) மற்றும் மின் மோட்டார், பைப் லைன் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.9.60 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வேண்டப்படுகிறது. (ந.க.எண் 684/2019/இ1)

### அலுவலகக் குறிப்பு :

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 11

பல்லடம் நகராட்சியில் உள்ள 9 குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளில் பொருத்தப்பட்டுள்ள குளோரினேசன் இயந்திரத்திற்கு தேவையான திரவ குளோரினேசன் (Hypo Chloride) சப்ளை செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 684/2019/இ1)

### அலுவலகக் குறிப்பு :

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 12

நகராட்சி வார்டு எண் 8 பனப்பாளையம் பழனிக் கவுண்டர் வீதி மற்றும் சென்னிமலைக் கவுண்டர் வீதியில் உள்ள திறந்தவெளிக் கிணற்றை தூர் வாரி சுத்தம் செய்து அப்புறப்படுத்தவும், சென்னிமலைக் கவுண்டர் வீதியில் உள்ள திறந்தவெளிக் கிணற்றிற்கு புதியதாக மின்மோட்டார் பொருத்தி, பைப் லைன் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.1.65 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 684/2019/இ1)

### அலுவலகக் குறிப்பு :

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 13

நகராட்சி வார்டு எண் 16 மாணிக்காபுரம் சாலையில் அரசு மருத்துவமனை பின்புறம் நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் செல்வதற்கு வழி இல்லாததால், பல்லடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகாலை உயர்த்தி, சிறுபாலம் அமைக்கவும் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள மீட்டர் பவர் பம்பு மீட்டர் பாக்ஸை மாற்றி அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.2.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 684/2019/இ1)

### அலுவலகக் குறிப்பு :

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 14

வார்டு எண் 14 செட்டிபாளையம் ரோடு மற்றும் வார்டு எண் 15 அண்ணாநகர் ஆகிய இரண்டு இடங்களில் பயணியர் நிழற்குடை அமைப்பதற்கு திரு.கருப்பசாமி, ஒப்பந்ததாரர் அவர்களுக்கு ரூ.6.60 இலட்சம் மதிப்பீட்டில், மதிப்பீடு விகிதத்தில் பணி உத்தரவு 10.10.2018ல் வழங்கப்பட்டது. அதில், வார்டு எண் 15 அண்ணாநகர் பகுதியில் பயணியர் நிழற்குடை அமைக்கும் பணி முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மற்றொரு பணியான வார்டு எண் 14 செட்டிபாளையம் ரோடு பகுதியில் பணி ஆரம்பிக்கும் போது அப்பகுதி மக்கள் பணியினை மேற்கொள்ள கூடாது என ஆட்சேபனை தெரிவித்தனர். மேற்கண்ட இடத்தினை பல்லடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நேரில் ஆய்வு செய்த போது, மேற்கண்ட இடத்திற்கு பதிலாக வார்டு எண் 01 கல்லம்பாளையம் பகுதியில், பணியினை மேற்கொள்ளுமாறு தெரிவித்தார். எனவே, கல்லம்பாளையம் பகுதியில் பயணியர் நிழற்குடை அமைப்பதற்கு ஒப்பந்ததாரர் திரு.கருப்பசாமி அவர்களே பணியினை மேற்கொள்ளவும், மதிப்பீடு தொகைக்கு மிகாமல் செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 139/2018/இ1)

### அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 15

வார்டு எண் 04 அரசு கலைக்கல்லூரி எதிர்புறம், வார்டு எண் 08 திருப்பூர் சாலை சந்திப்பு, வார்டு எண் 14 காவல் நிலையம் எதிர்புறம் ஆகிய மூன்று இடங்களில் பயணியர் நிழற்குடை அமைப்பதற்கு திரு.கருப்பசாமி, ஒப்பந்ததாரர் அவர்களுக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில், மதிப்பீடு விகிதத்தில் பணி உத்தரவு 10.10.2018ல் வழங்கப்பட்டது. அதில், வார்டு எண் 04 அரசு கலைக்கல்லூரி எதிர்புறம் பயணியர் நிழற்குடை அமைக்கும் பணி முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. வார்டு எண் 08 திருப்பூர் சாலை சந்திப்பு பகுதியில் பயணியர் நிழற்குடை அமைக்கும் பணி துவங்கப்படும் நிலையில் உள்ளது. மற்றொரு பணியான வார்டு எண் 14 காவல் நிலையம் எதிர்புறம் பகுதியில் பணி ஆரம்பிக்கும் போது அப்பகுதி மக்கள் பணியினை மேற்கொள்ள கூடாது என ஆட்சேபனை தெரிவித்தனர். மேற்கண்ட இடத்தினை பல்லடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நேரில் ஆய்வு செய்த போது, மேற்கண்ட இடத்திற்கு பதிலாக வார்டு எண் 11 பொள்ளாச்சி சாலை வடுகபாளையம் பகுதியில், பணியினை மேற்கொள்ளுமாறு தெரிவித்தார். எனவே, வடுகபாளையம் பகுதியில் பயணியர் நிழற்குடை அமைப்பதற்கு ஒப்பந்ததாரர் திரு.கருப்பசாமி அவர்களே பணியினை மேற்கொள்ளவும், மதிப்பீடு தொகைக்கு மிகாமல் செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 139/2018/இ1)

### அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 16

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10 முதல் 18 வரை உள்ள ஆழ்துளைக் கிணறு மற்றும் திறந்தவெளிக் கிணறுகளில் உள்ள மின்மோட்டார்கள், பூஸ்டர் மோட்டார் மற்றும் கழிவுநீர் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.80 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 684/2019/இ1)

### அலுவலகக் குறிப்பு :

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 17

நகராட்சி வார்டு எண் 7 பனப்பாளையம் திருச்சி சாலை சந்திப்பிலிருந்து இராயர்பாளையம் புதிய மேல்நிலைத் தொட்டி வரை 4 இன்ஞ் டி.ஐ (DI) குழாய் மற்றும் உதிரி பாகங்கள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 684/2019/இ1)

### அலுவலகக் குறிப்பு :

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 18

நகராட்சி வார்டு எண் 16 மாணிக்காபுரம் சாலை சாக்குகடை வீதி மற்றும் BC ஹாஸ்டல் பின்புறம் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 684/2019/இ1)

### அலுவலகக் குறிப்பு :

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தனி அலுவலர்**
**பல்லடம் நகராட்சி**